

# நிழல்







நாம் அனைவரும் தினமும் காலை அன்றைய தினம் செய்ய வேண்டிய ஆயிரக்கணக்கான வேலைகளைப் பட்டியலிட்டு கொண்டே விழிக்கும் போது, இவர் மட்டும் கையில் கோடாரி, கழிக்கும் கருவி, நீர் பாய்ச்சும் கருவி, கடப்பாரை, மண்வாரி ஆகியவையோடு அதிகாலையிலேயே தன் நாளை துவங்குவார். இதை இன்று செய்ய வேண்டும் என்று அவர் எதுவும் குறிப்பாக வைத்து கொள்வதில்லை. ஏனெனில் அவரின் உதவி பலதுக்கும் தேவைப்படுகிறது. அவரின் அபரிமிதமான பொறுப்பு, தன்னார்வத்தினால் அவர் சுறுசுறுப்பாக இருப்பதோடு எதையும் செய்யவும், எதையும் எதிர் கொள்பவருமாக இருக்கிறார். இவர் தான் ஷோபா மேனன் - நிழல் அமைப்பை உருவாக்கியவர்களில் ஒருவர்.

நிழல் ஒரு அரசு சாரா நிறுவனம் - மரங்கள் பாதுகாக்கப் பட வேண்டும், மரங்கள் அதற்கான இடத்தில் நம் எதிர்காலத்திற்காக வளர்க்கப் பட வேண்டும் என்று உணர்ந்த சில நல்ல உள்ளங்களால் தொடங்கப்பட்டது. நிழலின் முக்கிய ஆலோசகர்கள் - டாக்டர்.சேகர் ராகவன், மழை நிலையத்தின் இயக்குனர், திரு.தத்தாரி சென்னையின் முதல் முக்கிய நகராட்சித் தலைவர், திரு.தியோடர் பாஸ்கரன், முன்னாள் தபால் நிலையம் பொது மேலாளர், டாக்டர்.பி.தயாநந்தன் சென்னை கிருஸ்துவ கல்லூரி ஆகியோராகும். செப்டம்பர் 2005-ல், சென்னையில் மரங்கள் நட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு, ஒரே சிந்தனையுடன் செயல்பட்ட பலர் சேர்ந்த ஒரு குழுவால், நிழல் நல்ல நிலைமைக்கு வந்தது. அந்த தருணம் முதல், நிழல், மரங்கள் நடுவது, நட்டவற்றை பாதுகாப்பது, வெட்டுவதைத் தடுப்பது, முக்கியமாக சுற்றுசூழலை பாதுகாக்க சமுதாயத்தை ஊக்குவிப்பது என்பதில் தீவிரம் காட்டியது.

நிழலின் முதல் முயற்சி, மக்களை அவரவர் இடத்தில் இருக்கும் மரங்களை பற்றிய புரிதலை புகுத்துவதாகும். 'மர உலா' என்ற ஒன்றைத் தொடங்கி, நகரத்தில் இருக்கும் மரங்கள் பற்றி விளக்கி மக்களை மரங்களுடன் நிழல் இணைத்தது. இந்த மர உலாவின் போது தான், மரங்களில் விளம்பர பலகைகள் அடிக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். இதன் மூலம் தான் அவர்களின் அடுத்த முயற்சியான 'மரங்களை சுதந்திரமாக இருக்க விடுங்கள்' என்ற பிரச்சாரம் தொடங்கியது. மரங்களில் பலகைகள் அடிப்பது, மின்சார விளக்குகளை மரத்தில் கட்டுவது, தண்ணீருக்காக மரம் சுற்றி தோண்டுவது ஆகியவை தடுக்கப்பட்டது. ஆனால், மரங்களின் மீதே 'மரங்களை காப்பாற்றுங்கள்' என்ற பலகை காணப்படுவது கொடுமை. கோட்டூர்புரத்தில் 50 மர கன்றுகளை நட்ட அவர்களின் அடுத்த முயற்சி - சுற்றுசூழலை பாதுகாக்க சமுதாயத்தை ஊக்குவிப்பதாகும்.

ஒவ்வொரு முயற்சியும் மற்றொரு செயலுக்கு வழி வகுத்து, நிழல் இன்று அழியும் நிலையில் இருக்கும் மரங்களுக்கு நிழலாய் இருப்பதோடு, மரங்களை நட்டு, அதை பாதுகாக்கவும் வேண்டும் என்று மக்களுக்கு உணர்த்துகின்றனர். இந்த பயணத்தில் பொறுப்பான பலரும் சேர்ந்து நிழலை விரிவாக்க உதவுகின்றனர். நிழல் ஒரு அரசு சாரா நிறுவனம் மட்டுமல்ல.அது ஒரு உணர்வு; வாழ்வுக்கான வழி; மரங்கள் என்ற ஒரே பற்று கொண்ட மக்கள் இயக்கம்.

நிழலின் குறிக்கோள் 'மரங்களை காப்பது நம் பொறுப்பு; நமக்கு கொடுக்கப்பட்ட வேலை இல்லை' என்று மக்களுக்கு மனதில் பதிய வைப்பதாகும். டாக்டர்.டி.டி.பாலு, கடல் உயிரியல் நிபுணர் சொல்லுவது 'மக்களுக்கு சுற்றுசூழல் விழிப்புணர்ச்சி கொண்டு வருவதே பெரிய சவாலாகும், ஊடகங்கள் இவ்வளவு மரங்கள் நடப்பட்டுள்ளன என்று சொன்னால், அது எவ்வளவு உண்மை, எத்தனை பிழைத்துள்ளது, என்ன மாதிரி கவனிப்பு கொடுக்கப்படுகிறது, தற்போது அவை நிலைமை என்ன என்று நிறைய கேள்விகள் எழுகிறது!!!

நம் நகர வாழ்க்கை ஒரு கட்டடங்கள் நிறைந்த காடு. இயற்கையின் ஆசீர்வாதம் இருந்தாலொழிய, நாம் மூச்சு விடுவதோ, அமைதியாக வாழ்வதோ கடினம். மறுக்க இயலாத நகரமயமாக்குதலிலும், வளர்ச்சி என்ற பெயரிலும் நாம் மனித இனத்திற்கே வழி செய்கிறோம். நிறைய மரங்களை வெட்டி விட்டதால், உயிரினங்கள் வாழுமிடமாக இருந்தது





தொலைந்தது. இதை புரிந்துக் கொள்ள நாம் தவறி விட்டோம். நிழல் இதை விளக்குவதைத் தன் கடமையாக கொண்டுள்ளது.

நிழலின் முதன்மையான செயல்திட்டம் 'கோட்டூர்புரம் மரப் பூங்கா' ஆகும். குப்பைக்குவியலாக இருந்த நாலரை ஏக்கர் நிலத்தை பசுமையாக்கக் கோரி, பொது நலத் துறை நிழலை அணுகியது. பெரிய சவாலாக இருந்தது என்னவெனில் …. நிதி கிடையாது; மின்சாரம் கிடையாது; தண்ணீர் கிடையாது. அவர்களிடம் இருந்தது அந்த இடத்தை சரி செய்ய வேண்டும் என்ற எண்ணமே! ஒரே ஒரு நீர் இறைப்பான் கொண்டு பல தன்னார்வலர்கள் 4-5 வருடம் உழைத்ததன் பலன், இன்று 600 மரங்களுக்கு மேல் உள்ள பசுமைப் பூங்கா, உயிரினங்கள் வாழுமிடமாக உருவாகியுள்ளது. இதை சமுதாயத்துக்கான ஒரு சிறந்த பூங்காவாக தக்க வைக்க, அந்த பகுதி மக்களே பொறுப்பு எடுத்துக் கொண்டனர். இந்த பூங்கா 'மாதவரம் மரப் பூங்கா' உருவாகவும் காரணமாக இருந்தது.

தமிழ்நாட்டில் 'நிழலின் பசுமை சிறைச்சாலை திட்டம்' அவர்களின் மற்றுமொரு சாதனையாகும். இந்த பசுமை புரட்சி நமக்கு ஒரு நல்ல ஆரோக்கியமான எதிர்காலத்தையே கொடுக்கும். புழலில் உள்ள 100 ஏக்கர் நிலத்தை பசுமையாக்க வேண்டும் என்று ஆரம்பித்தது, இன்று பல கைதிகளின் திறமை வளரவும் அவர்களின் வாழ்வுக்கு ஒரு வழியாகவும் விளங்குகிறது. இந்த திட்டம் தமிழ்நாட்டில் உள்ள சேலம், கோயம்புத்தூர், வேலூர், புதுக்கோட்டை, திருச்சி, கடலூர், பாளையங்கோட்டை, மதுரை சிறைச்சாலைகளிலும் பின்பற்றப்பட்டது. ஷோபா இந்த சிறைச்சாலைகளை பசுமை இயக்கத்துக்கான முன் மாதிரி என்று சொல்கிறார். அவர்களுக்கு தேவையான காய்கறி போட்டு, தேவையான உரம் செய்து, அதை வெளியில் விற்று, அதை தொடர்ந்து செய்து வருகின்றனர்.





நிழலின் மற்றொரு பெருமைக்குரிய திட்டம் 'நீர் வனம்'. அதாவது சிட்லப்பாக்கம் ஏரியை சுற்றி புறம்போக்கு நிலமாக இருந்த இடத்தில் இன்று நம்மூர் மரங்கள் வளர்ந்து உயிரினங்கள் வாழும் இடமாக மாறி உள்ளது. அதை சுற்றி வாழும் மக்களே மரங்களின் முக்கியத்துவம் அறிந்து அதை பராமரிப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதையே நிழல் தங்களின் வெற்றியாக கருதுகிறது. தேவையான மரங்களை தேர்வு செய்வது, அதன் பயன் என்ன, எந்த இடத்திற்கு எந்த மரங்கள் நட வெண்டும், அதன் குணாதிசயங்கள் என்ன, எப்படி வளரும், எப்படி பெருகும் என்பதை விளக்குவது நிழலின் பிரதான அம்சங்கள் ஆகும்.

நிழல், நம்மூருக்கே உரிய மரங்களைத் தான் நட வேண்டும் என்று வலியுறுத்தும். 'அர்ஜுன்' எனும் 'நீர் மருது' இதயம் பேணும் தன்மை கொண்டது மற்றும் அபூர்வ டஸ்ஸர் பட்டு கொடுக்கிறது. 'வேப்பிலை', தோல் நோய்க்கு தீர்வு கொடுக்கும் மருந்து. 'பூவண்டிக்கோட்டை', சோப்பு செய்ய பயன்படுகிறது. 'அழிஞ்சில்', விலங்குகள் கடிக்கு நல்லது. யாரும் அறியாத 'கடல்திராட்சை' கடல் பகுதிகளில் உயிர் கவசமாக உள்ளது. 'புத்ரான்ஜீவ ராக்ஸ்புர்கீ', குழந்தைகளுக்கு எதிர்ப்பு சக்திகொடுக்கிறது. 'புரசு' மரம் - புரசைவாக்கம் பெயர் இதிலிருந்து வந்தது. 'ஜாமுன்' (ஸ்லோகாவில் வரும்) விதை சக்கரை நோய்க்கு நல்லது. ஜாமுன் மரத்திலிருந்து கிடைக்கும் மரத்தில் செய்யப்படும் பானைகள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த மரத்தின் பயன்கள் எண்ணற்றவை.

நிழலின் போற்றக்கூடிய வேலை அனைத்தும் அவரின் பொறுப்பான குழுவுக்கும், தன்னார்வலர்களுக்கும் சேர வேண்டிய பெருமை என்று சொல்கிறார் ஷோபா. புவனா, லதா, சௌதாமினி, சுவாமிநாதன், காசிராமன், ரஜனி, கஜேந்திரன் ஆகியோர் வெவ்வேறு பிண்ணனியிலிருந்து மற்றும் துறையிலிருந்து வந்தாலும் நிழலுக்காக தம்மைக் கொடுத்தவர்கள். முழு நேர வேலையில் இருக்கும் இளவயதுக்காரர்கள் கூட வாரம் ஒரு முறையோ இரு முறையோ நிழலுக்கு வேலை செய்ய நேரம் ஒதுக்குகிறார்கள். மரம் நடுவது மட்டும் இவர்கள் வேலை அல்ல…. களை எடுப்பது, நீர் பாய்ச்சுவது, உரத்திற்கு குழி வெட்டுவது, வேண்டாதவற்றை கத்தரிப்பது, வேருக்கான உரமிடுவது, இன்னும் பலவற்றைப் பற்றி வகுப்புகள் எடுப்பதாகும். ஷோபா மாநகராட்சி மற்றும் வனத்துறையின் ஒத்துழைப்பையும் புகழ்ந்து பேசுகிறார். வி.சித்ரா, என்ற மற்றுமொரு பொறுப்பாளர் 'பள்ளியில் நிழல்', 'ஜூனியர் யுவா', 'முகம் மாறும் மரங்கள்' என்ற திட்டங்களின் மூலம் குழந்தைகளுக்கு பசுமையாக்குதல் பற்றி சொல்லி கொடுக்கிறார்.

நகரத்தில் வாழும் ஒவ்வொரும் ஒரு மரத்தை தத்து எடுத்து கொண்டு, இந்த நகரத்தையே பசுமையாக்குவர் என்று நிழல் நம்புகிறது. மக்கள் எதன் மீதாவது அக்கறை காட்டினால், அது மக்களின் பார்வையையே நல்ல விதத்தில் மாற்றி விடும். நாம் வாழும் இடத்தில் இடப் பற்றாக்குறை இருப்பதால், நம் வீட்டுக்கு பின்னாடியோ, உள்ளேயோ சிறிது இடம் பார்த்து பசுமையாக்க வேண்டும். நாம் இதை நினைக்க வேண்டும். நினைத்ததை செய்ய வேண்டும்.

என் வீட்டில், என் தெருவில், என் அக்கம்பக்கத்தில் மரங்கள் சூழ்ந்து இருக்க நான் என்ன செய்ய வேண்டும்' என்று சிந்திக்க நிழல் குழு நம்மைத் தூண்டுகிறது.